இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 13 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 06 – வியாழக்கிழமை 22 ஆகஸ்டு 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 13 : Thiruvalluvar Year - 2055 - Aavani 06 - Thursday 22 August 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## ‘லேட்டரல் என்ட்ரி’ என்பது சமூகநீதியின் மீதான தாக்குதலாகும்!

# வேலைவாய்ப்புகளை நியாயமான முறையில் பகிர்ந்தளித்திடுவீர்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.08.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் கருவூலக் கணக்குத் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கணக்கர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 537 நபர்களுக்கும், கருவூலக் கணக்குத் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் 10 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலும், பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித்துறை செயலர் (செலவினம்) எஸ்.நாகராஜன், கருவூலக் கணக்கு ஆணையர் கிருஷ்ணனுன்னி ஆகியோர் உள்ளனர்.

## ஒன்றிய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, ஆக. 22 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் “ஒன்றிய அரசு வேலைவாய்ப்புகளை நியாயமான முறையில் பகிர்ந்தளித்திட வேண்டும்” என்றும் “லேட்டரல் என்ட்ரி என்பது சமூகநீதியின் மீதான தாக்குதலாகும்” என்று கூறியுள்ளார்.**

யு.பி.எஸ்.சி. சமீபத்தில் இணைச் செயலாளர்கள், இயக்குநர்கள், துணை செயலாளர்கள் போன்ற பதவிகளுக்கு நேரடி ஆள்சேர்ப்பு மூலம் பணியமர்த்துவதற்கான அறிவிப்பினை வெளியிட்டிருந்தது. இது எஸ்சி, எஸ்டி மற்றும் ஒபிசி பிரிவினருக்கான இடஒதுக்கீட்டு உரிமைகளை குறைத்து மதிப்பிடுகின்றது என்று எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்திருந்தன. என்றாலும், சில பதவிகளுக்கு சிறப்பு ஞானம் தேவைப்படுகிறது என்று ஏ.ஆர்.சி. அங்கீகரித்துள்ளது. அது அரசுப் பணியாளர்களிடம் இருப்பதில்லை, அப்படியான நேரத்தில் அந்த இடைவெளிகளை நிரப்ப தனியார் துறை, கல்வித் துறை மற்றும் பொதுத் துறைகளில் இருந்து நிபுணர்களை எடுத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரைக்கிறது.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சமூகநீதியை நிலைநாட்டவும், இட ஒதுக்கீட்டைப் பாதுகாத்து அது சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யவும் கீழ்க்காணும் நடவடிக்கைகளை உடனே மேற்கொண்டாக வேண்டும்.

லேட்டரல் என்ட்ரி என்பது சமூகநீதியின் மீது தொடுக்கப்படும் தாக்குதலாகும்; தகுதிமிக்க பட்டியல் பழங்குடி, இதர பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்குரிய வாய்ப்புகளை உயர்மட்டத்தில் தட்டிப் பறிப்பதாகும். ஒன்றிய அரசு இதனைக் கைவிட்டு, நிரப்பப்படாமல் இருக்கும் ஓ.பி.சி, எஸ்.சி/எஸ்.டி பிரிவினருக்குரிய பணியிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், நியாயமான, சமத்துவமான முறையில் பதவி உயர்வு வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும்.

தொடக்கத்தில் இருந்தே நாங்கள் எதிர்த்து வருகிற ‘க்ரீமி லேயர்’ முறையை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும். அதற்கு முன்பு, பல ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருக்கும் க்ரீமிலேயருக்கான வருமான உச்ச வரம்பை இனியும் தாமதிக்காமல் உடனடியாக உயர்த்திட வேண்டும்.

அனைத்திற்கும் மேலாக, நாடு முழுவதும் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். வரலாறு நெடுக தங்களுக்குரிய பங்கு மறுக்கப்பட்ட நம் சமூகத்தின் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட இது கட்டாயமாகும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### உயர் பதவிகளில் நேரடி நியமனம் ரத்து - ஒன்றிய அரசு பணிந்தது!

**ஒன்றிய அரசின் உயர் பதவிகளில் நேரடி நியமனம் என்பது சமூகநீதி மீதான தாக்குதல் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். இதேபோல, நேரடி நியமனம் என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் மீதான தாக்குதல், இடஒதுக்கீடு முறையை ஒழிக்கும் முயற்சி என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியிருந்தார். சமாஜ்வாதி, ராஷ்டிரிய ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. மேலும் ஒன்றிய அரசின் உயர் பதவிகளில் நேரடி நியமனம் செய்வது முற்றிலும் தவறானது என பா.ஜ.க. கூட்டணி கட்சியான லோக் ஜனசக்தி தலைவர் சிராக் பஸ்வானும் குற்றஞ்சாட்டியிருந்தார். இந்நிலையில், கடும் எதிர்ப்பை தொடர்ந்து, ஒன்றிய அரசின் உயர் பதவிகளில் நேரடியாக அதிகாரிகளை நியமிக்கும் அறிவிப்பு ரத்து செய்யப்படுவதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதுதொடர்பாக யுபிஎஸ்சி தலைவருக்கு ஒன்றிய அமைச்சர் ஜிதேந்திர சிங் எழுதியுள்ள கடிதத்தில், நேரடி நியமனத்துக்கான நடைமுறையை ரத்து செய்யும்படி வலியுறுத்தியுள்ளார்.**

### இடை நுழைவு ஆட்சேர்ப்பை

## ஒன்றிய அரசு திரும்பப் பெற்றது சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி!

### தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, ஆக.22 -

இந்தியா கூட்டணியின் கடும் எதிர்ப்பிற்குப் பிறகு இடை நுழைவு ஆட் சேர்ப்பை ஒன்றிய அரசு திரும்பப் பெற்றுள்ளது சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி என கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**சமூக நீதிக்கு வெற்றி. நமது இந்தியா கூட்டணியின் கடும் எதிர்ப்பிற்குப் பிறகு, இடைநுழைவு ஆட்சேர்ப்பை (Lateral Entry Recruitment) ஒன்றிய அரசு திரும்பப் பெற்றுள்ளது.**

**ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு வடிவங்களில் இடஒதுக்கீட்டை பலவீனப்படுத்த முயற்சி செய்யும் என்பதால், நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.**

**இட ஒதுக்கீட்டுக்குத் தன்னிச்சையாக விதிக்கப் பட்டுள்ள 50 விழுக்காடு உச்சவரம்பு உடைக்கப் பட வேண்டும். மேலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நாடு முழுவதும் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியது அவசியம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## மருத்துவர்களின் பாதுகாப்பை ஆய்வு செய்ய தேசிய அளவில் குழு!

### உச்சநீதிமன்றம் உத்தரவு!

*புதுடெல்லி, ஆக. 22 -*

*அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கு பணியிடப் பாதுகாப்பை உறுதி செய்ய 10 மருத்துவர்கள் கொண்ட தேசிய அளவிலான குழுவை உச்சநீதிமன்றம் அமைத்து உத்தரவு பிறப்பித்துள்ளது.*

*கொல்கத்தாவில் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட வழக்கினை, உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை நடத்தியது. தலைமை நீதிபதி தலைமையிலான 3 நீதிபதிகள் வழக்கை விசாரித்தனர்.*

*அப்போது, பெண்களுக்கு பாதுகாப்பு மட்டும் பிரச்சினையாக இல்லை என்றும், பணி சூழலும் முக்கியமான பிரச்சினையாக உள்ளது என நீதிபதிகள் குறிப்பிட்டனர்.*

*பெண்களுக்கு பாதுகாப்பான பணி சூழலை உருவாக்க தேசிய அளவில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.*



*பாதிக்கப்பட்ட பெண்ணின் புகைப்படம் மீடியாக்களில் வெளியிட்டது கவலை அளிப்பதாக உள்ளது என கூறிய நீதிபதிகள், பெற்றோர்கள் உடலை காண அனுமதி மறுத்தது, தற்கொலை என்று பரப்பியதை ஏற்க முடியாது என்றும் நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர் கேரளா, தமிழ்நாடு, தெலுங்கானா உள்ளிட்ட சில மாநிலங்கள் மருத்துவர்களுக்கான பாதுகாப்பு சட்டத்தை இயற்றினாலும் அது போதுமானதாக இல்லை என்றும், நீதிபதிகள் தெரிவித்தனர்.*

*பின்னர் அரசு, தனியார் மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கு பணியிடப் பாதுகாப்பை உறுதி செய்ய 10 மருத்துவர்கள் கொண்ட தேசிய அளவிலான குழுவை உச்சநீதிமன்றம் அமைத்து உத்தரவு பிறப்பித்துள்ளது. தேசிய அளவில் மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும் என்றும், குழுவில் ஒன்றிய அமைச்சரவை செயலாளர், உள்துறை செயலாளர், சுகாதாரத் துறை செயலாளர், மருத்துவ ஆணைய தலைவர் உள்ளிட்டவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*அரசு, தனியார் மருத்துவமனைகளில் பாலியல் தொல்லை குறித்து புகார் தெரிவிக்க, விசாரணை நடத்த உரிய குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும், மூன்று வாரத்தில் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இரண்டு மாதத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய உச்சநீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.*

## ஒன்றிய அரசு கைத்தறித் துறையை கைவிட்டுவிட்டது!

### திருமதி. சோனியா காந்தி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஆக. 22 -*

கைத்தறித் துறையை ஒன்றிய பா.ஜ.க. அரசு கைவிட்டுவிட்டதாக, நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத் தலைவர் சோனியா காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத் தலைவர் சோனியா காந்தி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஹர் கர் திரங்கா எனும் வீடு தோறும் தேசியக் கொடியேற்றுவது என்ற நிகழ்வில், பாலியஸ்டர் மூலம் நெய்யப்பட்ட தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். இதன் மூலம், சீனா மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாலியஸ்டர் நூல் மூலம் உருவாக்கப்பட்ட தேசியக் கொடிகள் அதிகரித்திருப்பது கைத்தறித் துறை மீதான தாக்குதல் ஆகும்.



காதி என்பது இந்திய வரலாற்றுடன் பின்னிபிணைந்த ஒன்று என்றும் கைத்தறி மூலம் உருவாக்கப்பட்ட தேசியக் கொடிகள் தான், சுதந்திர போராட்டத்தில் முக்கிய பங்காற்றியது. ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில், காதி தனிமனிதனின் இறையாண்மை மற்றும் தன்னிறைவைக் கண்டறியும் கருவியாக இருந்தது.

கைத்தறி தொழிலாளர்களுக்கு ஜிஎஸ்டி தொடர்ந்து சுமையாக உள்ளது என்றும், இறுதி தயாரிப்பு மற்றும் மூலப்பொருட்கள் மீது வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது நஷ்டத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. குறிப்பாக மின்சாரம் மற்றும் பருத்தி நார் ஆகியவற்றின் விலைகள், கைத்தறி தொழிலாளர்களை பிழியும் வகையில் உள்ளது. நமது தேசியக் கொடியை தாங்கி நிற்கும் ஒரே துணியாக காதியை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளை தொடங்கிட வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத் தலைவர் சோனியாகாந்தி வலியுறுத்தியுள்ளார்.